செய்தி வெளியீடு எண்.164 நாள். 19 .02.2010

## செய்தி வெளியீடு – 19.2.2010

## மத்திய அமைச்சர் மு.க. அழகிரி அவர்களின் பரிந்துரையை ஏற்று, மதுரை ஹார்விப்பட்டி பகுதி கண்மாயில் மூழ்கி இறந்த மூன்று சிறுவர்களின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ஹார்விப்பட்டி பேரூராட்சியில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் ஐந்தாம் வகுப்பு படித்துவந்த சிறுவர்களான மோகன்தாஸ் என்பவரின் மகன் நீலமேகம், ரவீந்திரன் என்பவரின் மகன் ஹரிசுதன், முருகன் என்பவரின் மகன் விஜய் ஆகிய மூவரும் அப்பகுதியில் உள்ள பானாங்குளம் கண்மாயில் குளிக்கச் சென்றபோது ஆழமான பகுதிக்குச் சென்றதால் நீரில் மூழ்கி இறந்தனர்.

இதுகுறித்த விவரம், மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் திரு மு.க.அழகிரி அவர்களின் பரிந்துரையுடன் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, உயிரிழந்த மூன்று சிறுவர்களின் குடும்பத்தார்க்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,

சென்னை–9.